

தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு பட்டுக்கோட்டையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் திருச்சி என்.சிவா எம்.பி. சிறப்புரையாற்றினார். பொதுக்கூட்டத்தில் அமைச்சர் முனைவர் கோவி.செழியன், மாவட்ட பொறுப்பாளர், தி.பழநிவேல், ச.முரசொலிஎம்.பி,சட்டமன்றஉறுப்பினர்கள்கா.அண்ணாதுரை,நா.அசோக்குமார்,மாநிலநிர்வாகிகள்ஏனாதிப.பாலசுப்ரமணியன், பழஞ்சூர் கே.செல்வம், வி.ஜெயபிரகாஷ், கார்த்திகேயன் வேலுச்சாமி, மாவட்ட அவைத்தலைவர் மிசா.அப்துல் சமது, பேராவூரணி தொகுதி பார்வையாளர் சு.ப.சரவணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



குன்னம் தொகுதி, செந்துறை ஒன்றிய இளைஞர்கள் மற்றும் பெண்கள் பயன்பெறும் வகையில் இலவச பயிற்சியுடன் கூடிய வேலை வாய்ப்புக்கான, "கலைஞர் கணினி பயிற்சி மைய"த்தை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் கழக சட்டதிட்ட திருத்தக் குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர் செந்துறை அண்ணா சிலை அருகில் உள்ள கழக அலுவலகத்தில் திறந்து வைத்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில்மாறன், ஆர்.கலியபெருமாள் மற்றும் மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள், இளைஞர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

### சூளகிரி வடக்கு ஒன்றியத்தில்

# முதல்வர் பிறந்தநாள் மாபெரும் பொதுக்கூட்டம்!

## ஓய். பிரகாஷ் எம்.எல்.ஏ.- செய்தித் தொடர்பு தமிழன் பிரசன்னா சிறப்புரை!

*கிருஷ்ணகிரி, மார்ச் 13-*

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் பேரிகையில் சூளகிரி வடக்கு ஒன்றிய செயலாளர் கே.நாகேஷ் தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் ஒன்றிய அவைத்தலைவர் ராஜேந்திரன் வரவேற்புரை ஆற்றினார். சீனிவாஸ் கவுடு, பிரவீன் குமார், ராமச்சந்திரன், ராஜப்பா, கெஞ்சப்பா, சித்தம்மா முனி கிருஷ்ணப்பா முன்னிலை வகித்தனர்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி. முருகன், ஒசூர் மாநகர மேயர் சத்யா, மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஓய். பிரகாஷ், கழகச் செய்தித் தொடர்பு இணை செயலாளர் தமிழன் பிரசன்னா சிறப்புரையாற்றினர்.

தமிழன் பிரசன்னா பேசும் போது எத்தனை ஆயிரம் கோடி கொடுத்தாலும் என் பிள்ளைகளுக்கு ஹிந்தி திணிக்க மாட்டேன், 2000 கோடி ரூபாய் இல்லை பத்தாயிரம் கோடி ரூபாய் கொடுத்தாலும் இந்தியை ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று நம்முடைய முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் கூறியிருக்கிறார். நீங்கள் பயணிக்கிற விடியல் பயணத்தில் தமிழ்நாட்டில் உள்ள மகளிர்க்காக நம்முடைய முதல்வர் ஒரு ஆண்டுக்கு 2000 கோடி ரூபாய் கொடுக்கிறார் , 100 நாள் வேலை திட்டத்தில் மோடி பணம் அனுப்ப மறுக்கிறார். இதனால் நம்முடைய தாய்மார்கள் 100 நாள் வேலைக்கு செல்ல முடியாமல் கிராமப்புறத்தில் தவிக்கின்றனர், நம்முடைய முதல்வர் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு காலை சிற்றுண்டி அளிக்கிறார். மேலும் தமிழ் படித்த மாணவியருக்கு கல்லூரியில் படிக்கும் பொழுது ஊக்கத்தொகையாக மாதம் ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார். அதே போல மாணவர்களுக்கும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் மாதம் ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார். வரும் 2026 இல் அவர்தான் முதலமைச்சர் என அவர் பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர்கள் சின்னசாமி, புஷ்பா சார்வேஷ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் எல்லோரா மணி, வீரா ரெட்டி, பொதுக்குழு உறுப்பினர் ஜெயராமன், ஒன்றிய செயலாளர்கள் ரகுநாத், கருணாகரன்

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சுமன், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் மாவட்ட ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் முன்னாள் இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் ஏராளமான கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

முடிவில் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் மணிகண்டன் நன்றியுரை ஆற்றினார்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தேனி வடக்கு மாவட்டம், தேனி நகரத்தைச் சேர்ந்த எம்.வி.கே.ஜீவா அவர்கள் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, **கழகத் தலைவர்** அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 11.03.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### ஆலத்தூர் ஒன்றியத்தில்

# சாலை அமைக்கும் பணி!

*பெரம்பலூர், மார்ச் 13-*

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் மேற்கு ஒன்றியம், நாரணமங்கலம் கிராமத்தில் ரூ.27.98 இலட்சம் மதிப்பீட்டில் காண்கிரீட் சாலை மற்றும் கழிவு நீர் வாய்க்கால் அமைக்கும் பணிக்கு சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் ஆகியோர் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தனர்.

ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன் தலைமையில், நாரணமங்கலம் கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ரூ.27.98 இலட்சம் மதிப்பீட்டில், ஆதிதிராவிடர் தெருவில் மலர் வீடு முதல் காரை ரோடு வரை சிமெண்ட் சாலை பணி, மாரியாயி வீடு முதல் பிரபு வீடு வரை சிமெண்ட் சாலை மற்றும் கழிவுநீர் வாய்க்கால் பணி,

மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி முதல் மணிமாறன் வீடு வரை சிமெண்ட் சாலை பணி ஆகியவற்றை தொடங்கி வைத்தனர். இதில் முன்னாள் கவுன்சிலர் ஆ.தனசேகரன், மாவட்ட பிரதிநிதி சந்திரமோகன், ஒன்றிய பொருளாளர் செ.புகழேந்திகிளைச் செயலாளர் வைத்தியலிங்கம், செல்வக்குமார் மற்றும் துரைராஜ், முத்துக்குமார், செங்கமலை, பிரபாகரன், குணசேகரன், ஆறுமுகம், கலியபெருமாள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு!

திருப்பூர் கிழக்கு மாவட்டம், காங்கேயம் நகரத்தைச் சேர்ந்த ந.சூரியபிரகாஷ் அவர்கள் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, **கழகத் தலைவர்** அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 11.03.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### சென்னை வடக்கு மாவட்டம் - பெரம்பூர் தெற்கு பகுதி

# 44 அ-வது வட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு!

சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் தெற்கு பகுதி, 44 அ-வது வட்டச் செயலாளர் ஆர்.எஸ்.மனோகரன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **எஸ்.அருள்** (21, ஆசிரியர் தெரு, வியாசர்பாடி, சென்னை - 600 039) அவர்கள் 44 அ-வது வட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை-18
நாள்- 11.03.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்

# நிலக்கோட்டை மேற்கு ஒன்றியம் அம்மையநாயக்கனூர் பேரூர்க் கழகப் பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு!

திண்டுக்கல் கிழக்கு மாவட்டம், நிலக்கோட்டை மேற்கு ஒன்றியம், அம்மையநாயக்கனூர் பேரூர்ச் செயலாளர் பெ.விஜயகுமார், ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள காரணத்தால், பேரூர்க் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, அம்மையநாயக்கனூர் பேரூர்க் கழக பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

பொறுப்பாளர்: **மு. ராஜாங்கம்**, அம்மையநாயக்கனூர், நிலக்கோட்டை, திண்டுக்கல் மாவட்டம்.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள்:

1.ஜார்ஜ் ஜோசப், அம்மாபட்டி, 2.சிவமுருகன், நாகையகவுண்டன்பட்டி, 3.எஸ். நடேசன், கொளிஞ்சிபட்டி, 4.பி.திருமூர்த்தி, கே.இராஜதானிக்கோட்டை, 5.நா.விமல்குமார், ஜெகநாதபுரம், 6.பி. வண்ணக்கிளி, ஏ.புதூர், கொடை ரோடு, 7.பி.பாலகிருஷ்ணன், மாவுத்தன்பட்டி, 8.சேட் மோகன், மாவுத்தன்பட்டி. 9.போ.மணிகண்டன், பொம்மனம்பட்டி, 10.பி. பாண்டிதளி, 11.எம். முகமது நசீர், அம்மையநாயக்கனூர், 12.கிங் ஜெயராஜ், மெயின் ரோடு, கொடை ரோடு.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை-18
நாள்- 11.03.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்

# ஆத்தூர் கிழக்கு ஒன்றியம் சின்னாளபட்டி பேரூர்க் கழகப் பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு!

திண்டுக்கல் கிழக்கு மாவட்டம், ஆத்தூர் கிழக்கு ஒன்றியம், சின்னாளபட்டி பேரூர்ச் செயலாளர் ஆ. மோகன்ராஜ் சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, பேரூர்க் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற சின்னாளபட்டி பேரூர்க் கழக பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படு கிறார்கள்.

பொறுப்பாளர் : **தி.பாலகிருஷ்ணன்**, எண்.15-9-9பி, தேவி நகர், காமாட்சி காலனி, சின்னாளபட்டி - 624 301. திண்டுக்கல் மாவட்டம்.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1.சு.நாகக்கண்ணன், முத்தமிழ் நகர், சின்னாளபட்டி, 2.திருமதி மு.கீர்த்தனா, ஏ.கே.எஸ்.தெரு, சின்னாளபட்டி, 3.சி.சோலைராஜ், ஜீவா நகர் 4வது தெரு, சின்னாளபட்டி, 4.செ.கோபிநாத், ராமவிலாஸ் சோடா பேக்டரி தெரு, கீழக்கோட்டை, 5.அ.வேல்முருகன், மந்தை தெரு, சிக்கனம்பட்டி, சின்னாளபட்டி., 6.ரா.குணசேகரன், பி.எஸ்.பி.டி. தெரு, சின்னாள பட்டி, 7.கா. முத்துவேல், செக்காபட்டி மெயின் ரோடு, சின்னாளபட்டி, 8.ஆ. கிருஷ்ணன், ராயல் தியேட்டர்பின்புறம், அண்ணாநகர், 9.சு.பொம்மையா, ஸ்ரீசாய் நிவாஸ், ஜீவாநகர், சின்னாளபட்டி, 10.த.தம்பித்துரை, ஏ.கே.எஸ்.தெரு, மேட்டுப்பட்டி, சின்னாளபட்டி.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை-18
நாள்- 11.03.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



ஒன்றிய பா.ஜ.க.அரசைக் கண்டித்து கோவை தெற்கு மாவட்டம் இளைஞரணி சார்பில் பொள்ளச்சி சட்டமன்றத் தொகுதி கிணத்துக்கடவு ஒன்றிய காட்டம்பட்டியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தலைமை கழக பேச்சாளர் மில்டன் கழக இளம் பேச்சாளர் மதுமிதா, கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் கண்டன எழுச்சியுரையாற்றினர். சபரி கார்த்திகேயன் திருமலைராஜா, ஈஸ்வரசாமி எம்பி, எஸ்.கிரிகதிர்வேல் வே.மருதவேல், செ.ஆ.துரை நவநீத கிருஸ்ணன், அய்யம்பாளையம் ராசு கி.ரமேஷ், முத்துக்குமார், ஆர்.மகேந்திரன், மணிசுந்தர், தினகரன், மு.க.முத்து, அமுத பாரதி, பாலகிருஷ்ணன், ஜெயக்குமார் சாந்தாமணி வேலுச்சாமி, சியாமளா உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் பேரிகையில் சூளகிரி வடக்கு ஒன்றிய செயலாளர் கே.நாகேஷ் தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஓய். பிரகாஷ் , கழகச் செய்தி தொடர்பு இணை செயலாளர் தமிழன் பிரசன்னா ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி. முருகன் , ஓசூர் மாநகர மேயர் சத்யா ஆகியோர் உடன் உள்ளனர்.